செ.வெ.எண்: 87 நாள்: 31.01.2017

**அம்மா சேவை மையம் மூலம் விவசாயிகள் வேளாண் விதைகளை மானிய விலையில் பெற்று பயன்பெறலாம் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசலில் புதிதாக கட்டப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடத்தை திறந்து வைத்தும் அம்மா சேவை மைய மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகளை வழங்கியும் மற்றும் மானிய விலையில் நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி பேசியதாவது.

தமிழகஅரசு வேளாண்மைத் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசலில் ரூ.60லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அன்னவாசல் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மைத் துறையின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட(நெல்)த்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ.3 லட்சம் மதிப்பில் பவர் டில்லர்களும், தேசிய உணவு பாதுகாப்பு குழும(பயறு) திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.45,000 மதிப்பில் பைப்பு லைன்களும், தேசிய உணவு பாதுகாப்பு குழும(நெல்) திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.35,000 மதிப்பில் சுழற்கலப்பையும், 1 பயனாளிக்கு ரூ.3000 மதிப்பில் விசை தெளிப்பானும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அட்மா திட்டத்தின் கீழ் 5 பனாளிகளுக்கு ரூ.20000 மதிப்பில் சூரிய மின் விளக்கு பொறிகளும், விதை கிராம திட்டத்தின் கீழ் 33 பயனாளிகளுக்கு ரூ.6600 மதிப்பில் விதை நெல்களும், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்க் ரூ.2.50 லட்சம் மதிப்பில் நிரந்தர பந்தல் காய்கறி சாகுபடிக்கான நலத்திட்ட உதவிகளும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.11250 மதிப்பில் பப்பாளி குழிதட்டு நாற்றுகளும், பிரதம மந்திரி விவசாய நீர் பாசன திட்டத்தின் கீழ் ரூ.276465 மதிப்பில் மழை துாவான்களும், பண்ணைக் குறைபாடு நிவர்த்தி செய்யும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.10000 மதிப்பில் காய்கறி கூடை மற்றும் பாலிதீன் பைகளும் என மொத்தம் 68 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ.957315 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அன்னவாசல் வட்டாரத்தில் நடப்பாண்டு 3100 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதுடன் இதில் 2942 ஹெக்டேர் பரப்பளவில் 4668 விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தில் பங்கு பெற்றுள்ளனர். வேளாண்மைத் துறையின் மூலம் ரூ.57 லட்சம் மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் நடப்பாண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அன்னவாசல் வட்டாரத்தில் வருடத்திற்கு 60 டன் நெல் விதைகள், 5 டன் பயிர் வகை விதைகள், 2 டன் சிறுதானிய விதைகள் மற்றும் 5 டன் எண்ணெய் வித்து பயிர் விதைகள் இந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் அம்மா சேவை மையம் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை விவசாயிகள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் கொண்டு வரப்பட்ட குடுமியான்மலை வேளாண்மை கல்லுாரியில் படித்து புதுக்கோட்டை மாவட்டத்திலேயே பணியில் இருக்கும் உதவி வேளாண் அலுவலர்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, செயற்பொறியாளர் (பொ.து) திரு.செங்குட்டுவேல், உதவிப் பொறியாளர் திரு.குமார், துணை இயக்குநர்(தோ.து) திரு.அருணாசலம், கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ராமசாமி, ஆத்மாக்குழுத் தலைவர் திரு.சாம்பசிவம், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**